2016 ஜனவரி 21]

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

மின்மாற்றி

***51078—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, விழுதமங்கலம் கிராமத்திலுள்ள 63 KVA *மின்மாற்றிக்குப் பதிலாக 100* KVA *திறன் கொண்ட மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதி, விழுதமங்கலம் கிராமத்தில் இருந்த 63 KVA *விழுதமங்கலம்* SS II *மின்மாற்றி, 100* KVA *திறன் கொண்ட மின்மாற்றியாக 22–11–2014 அன்று மாற்றியமைக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.*

திரு. வி.எஸ். இராஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்தக் கோரிக்கையை பேரவையில் வைத்தவுடன் நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2013 ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில் ஆரணி தொகுதிக்குட்பட்ட, செய்யாறு ஒன்றியத்திலே, கொருக்காத்தூர் பகுதியிலே, உயர் மின் அழுத்தம் அதிகமாக இருக்கின்றது என்றும், அங்கே இருக்கக்கூடிய மின்மாற்றிகளில் அடிக்கடி பழுது ஏற்படுகின்றது என்றும், எனவே அந்தப் பழுதுகளைக் களைய வேண்டும் என்பதற்காக புதியதாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்றும் நான் வினா கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தார்.*

ஆனால், இன்றுவரையிலே அங்கு எந்தவிதமான பணியும் துவங்கப்படவில்லை. எனவே, இதை முக்கிய நோக்காகக் கருதி, உடனடியாக அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலே உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த அடிப்படையிலே, இப்போது அங்கே தொடர் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் இன்னும் விரைவுபடுத்தப்பட்டு, அந்தப் பகுதியிலே ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு அம்மா*

அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் கொண்டாடப்படும் மகாமகத் திருவிழா, வட இந்தியாவில் கொண்டாடப்படும் கும்பமேளாவிற்கு இணையாகக் கருதப்படுகிறது. கொட்டையூர் பகுதி, மேலக்காவேரி, அசூர் போன்றவை வளர்ந்துவரும் புதிய நகர்கள் ஆகும். குறிப்பாக, விவசாயப் பகுதிகள் மிகுந்த கொட்டையூரில் 110 K.V.A. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இப்பேரவையில் 5–12–2014 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து, உரிய இடம் தேர்வு செய்யும் பணி நடைபெறும் என்று தெரிவித்தார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் 2016 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மகாமகத் திருவிழாவிற்கு முன்பு, அப்பணியினை விரைவுபடுத்தி, கொட்டையூரில் 110 K.V.A. துணை மின் நிலையம் அமைத்திட ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், மின்மாற்றிகள் பழுதடைந்தால், புதிய மின்மாற்றிகள் மிக காலதாமதமாக வருகின்றன. எனவே, அந்தந்த மாவட்ட மையங்களில் மின்மாற்றிகள் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று ஏற்கெனவே, இம்மன்றத்தில் நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், ஆவன செய்யப்படும் என்று கூறினார்கள்; அது நடைபெறுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இதுகுறித்து குறிப்பிட்டிருந்தார்கள். அதன் அடிப்படையில் இப்பொழுது அந்தப் பணிகளை

[2016 ஜனவரி 21

விரைவுபடுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும். தேவையான மின்மாற்றிகளை வைப்பதற்கு மட்டுமல்லாமல், புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளையும் எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 வது சட்டமன்றப் பேரவையின் கூட்டத் தொடரில் முதல் கேள்வியாக, "பட்டுக்கோட்டை தொகுதி, கீழக்குறிச்சி கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படுமா?" என்று நான் கேட்டிருந்தேன். தற்பொழுது அந்தப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக, இந்த அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிராமபட்டினம் பேரூராட்சி, தம்பிக்கோட்டை, வடகாடு ஆகிய இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பதற்காக இடம் தேடிக் கொண்டிருந்தார்கள். தற்போது, அவர்கள் இடத்தைத் தேர்வு செய்துவிட்டார்கள் என்று தெரிகிறது. எனவே, அதற்கான பணிகளை ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான சாத்தியக் கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடையூறாக அமைவது போதிய இடம் கிடைக்காததுதான். இதனால்தான், பல இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு காலதாமதம் ஆகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இடப் பிரச்சினை இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே,*

2016 ஜனவரி 21]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு, "திருவிடைமருதூர் சட்டப் பேரவைத் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், புத்தூருக்கும், திருப்பனந்தாள் ஒன்றியம், பந்தநல்லூருக்கும் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்" என்று நான் வேண்டுகோள் வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "அதற்கு ஆவன செய்யப்படும்" என்று சொன்னார்கள். கும்பகோணம் ஒன்றியம், புத்தூர் ஊராட்சியில், வருவாய்த் துறை அதிகாரிகள், கிராம நிருவாக அலுவலர், மின்சார வாரிய உயர் அதிகாரிகள், ஊர் பொது மக்கள், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான், என எல்லோரும் ஒன்று சேர்ந்து, அரை நாள் மெனக்கெட்டு துணை மின் நிலையம் அமைப்பதற்குரிய இடத்தைத் தேர்வு செய்து தந்தோம். அதன் பிறகு, அதற்குரிய பணி எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. "துணை மின் நிலையம் அமைப்பதற்கு பந்தநல்லூரில் இடம் இல்லை; மரத்தூரில் இடம் உண்டு" என்று மின் வாரிய ஊழியர்கள் சொன்னார்கள். மேற்கூறிய அந்த இரண்டு இடங்களிலும் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா அல்லது அந்தத் திட்டம் கைவிடப்பட்டதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எந்தவொரு திட்டத்தையும் கைவிடுகின்ற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற அரசுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதிகாரிகளுடன் இணைந்து துணை மின் நிலையம் அமைப்பதற்கு உரிய இடம்*

தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த விவரங்களைக் கொடுப்பாரேயானால், இன்னும் எவ்வளவு விரைவாக துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அந்த அளவிற்கு அந்தப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பாக, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, துணை மின் நிலையம் அமைப்பதில் இருக்கின்ற பெரிய இடர்ப்பாடு இடப் பிரச்சினைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இடப் பிரச்சினை இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தடை ஏதும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

விடுகள் கட்டுதல்

***37742—திரு. என்.எஸ்.என். நடராஜ்:**

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு*